கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (கனடா)
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2017**

# 9 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

## பெற்றோரைப் பேணுதல்

எம்மைப் பெற்றவர்கள் தாய் தந்தையரே. சிறுவயதிலிருந்து எம்மைப் பாதுகாத்து வளர்ப்பவர்களும் அவர்களே. நாம் ஆரோக்கியமாக வளர நல்ல உணவும் உடையும் தருபவர்களும் அவர்களே. நாம் நல்ல நிலைக்குவரச் சிறந்த கல்வியைத் தருகிறார்கள். நோய் வராமல் எம்மைப் பாதுகாக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து, எமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். விரும்பிய பொருட்களை வாங்கித் தருவது மட்டுமன்றி, நாம் விரும்பிய இடங்களுக்கும் கூட்டிச் செல்கிறார்கள்.

நாம் நல்ல பிள்ளைகளாக வளர நற்பழக்கங்களைச் சொல்லித் தருகிறார்கள். இதனாலேயே ஔவையார் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார். பெற்றோர்களே நாம் கண்ணால் காணும் தெய்வங்களாகும். எமக்காகப் பாடுபட்ட பெற்றோரை அன்போடு மதிக்க வேண்டும். அவர்களின் முதுமைக் காலத்தில் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். இதைவிட மேலான செயல் உலகில் வேறெதுவும் இல்லை. எனவேதான் வள்ளுவர்

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு" என்றார்.

இரவும் பகலும் நாளும் பொழுதும் எம்மைக் காத்து வளர்க்கின்ற பெற்றோரை என்றும் போற்றுவோம் வாழ்த்துவோம்.

*********